

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 02.01.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- பாதுகாப்பு செய்திகள்








# தேசிய நிகழ்வுகள்

- புதுவை மாநிலத்தின் அனைத்து பொதுமக்களுக்கும் **முதல்வரின் மருத்துவக் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படும் என புதுவை மாநில முதல்வர் அறிவிப்பு.**
    - இந்த திட்டத்தின் கீழும் ஆயுஷ்மான் பாரத் திட்டம் போல ரூ.5 லட்சம் வரை பொது மக்கள் மருத்துவ காப்பீடு பெற முடியும்.
    - புதுச்சேரியில் ஆயுஷ்மான் பாரத் திட்டம் மூலம் 1.03 லட்சம் பேர் பயனடைகின்றனர்.
    - **செய்தி துளிகள் :**
        - பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (ஆயுஷ்மான் பாரத்) உலகின் மிகப்பெரிய மருத்துவ காப்பீடு திட்டமாகும்.
        - ஆயுஷ்மான் பாரத் திட்டத்துடன் ஏற்கனவே ஒடிஸா மாநிலம் பிஜு ஸ்வத்ய கல்யாண் யோஜனா மற்றும் தெலுங்கான அரசின் ஆரோக்யஶ்ரீ திட்டமும் பெண்களுக்கு கூடுதலாக 2 லட்சம் மருத்துவ வசதிகளை செய்கிறது.

- **தூத்துக்குடியில் இரண்டாவது ராக்கெட் ஏவுதளம் அமைக்கப்படும் என இஸ்ரோ தலைவர் கே.சிவன் தெரிவித்துள்ளார்.**
    - சிறிய செயற்கைக் கோள் ஏவுகலன்களை விண்ணில் செலுத்துவதற்காக தூத்துக்குடியில் 3 ஆயிரம் ஏக்கர்

நிலத்தில் இரண்டாவது ஏவுதளத்தை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- சந்திராயன் - 3 திட்டத்திற்கும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக சிவன் தெரிவித்துள்ளார்.
- **செய்தி துளிகள் :**
  - 2019 – ம் ஆண்டில் மட்டும் 6 ராக்கெட், 7 செயற்கைகோள் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.
  - 2019 – ம் ஆண்டு இஸ்ரோ – வால் பள்ளிக் குழந்தைகளுக்கு விண்வெளி தொழில் நுட்பம் குறித்து பயிற்சி அளிக்க “இளம் விஞ்ஞானிகள்” திட்டம் தொடங்கப்பட்டது.
  - மனிதர்களை விண்ணில் செலுத்தவிருக்கும் “ககன்யான்” திட்டம் 2022 – ம் ஆண்டுக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- **தூய்மையான நகரம் பட்டியல் வெளியீடு**
  - தொடர்ந்து **4 முறையாக மத்திய பிரதேச மாநிலம் இந்தூர் நகரம்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
  - தூய்மைக்கான நகரங்கள் குறித்த “தூய்மை சர்வே லீக் 2020” முடிவுகளை மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி வெளியிட்டார்.
  - **செய்தி துளிகள் :**
    - 10 லட்சத்துக்கும் அதிகமானோரை கொண்ட நகரங்களை மத்திய அரசு ஆய்வுக்கு

எடுத்துக்கொண்டது.

- இந்தப்பட்டியலில் மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தா கடைசி இடத்தில் உள்ளது.
- தூய்மை சர்வே லீக் 2020 மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற வசதி அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.

## விளையாட்டு செய்திகள்

- **உலக பிளிட்ஸ் செஸ் போட்டி மாக்னஸ் கார்ல்ஸன் சாம்பியன் பட்டம் வென்றார்.**
    - ரஷியா தலைநகர் மாஸ்கோவில் பிளிட்ஸ் செஸ் போட்டி நடைபெற்று வருகிறது.
    - மகளிர் பிரிவில் ரஷிய வீராங்கனை லாக்னோ கட்ரேயனா சாம்பியன் பட்டம் வென்றார்.
    - **செய்தி துளிகள் :**
        - மாக்னஸ் கார்ல்ஸன் நடப்பு செஸ் உலக சாம்பியன் ஆவார்.
        - உலக சாம்பியன்ஷிப், ஸ்டான்ட்டார்ட், ரேபிட், பிளிட்ஸ் பட்டங்களை ஒரு சேர வைத்துள்ள வீரர் ஆவர்.
        - மாக்னஸ் கார்ல்ஸன் ஃபிடே தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார்.

## நியமனங்கள்

- **சி.ஆர்.பி.எப் தலைவராக இந்தோ – தீபெத் எல்லை காவல் படை தலைவர் எஸ்.எஸ் தேஸ்வாலுக்கு கூடுதல் பொறுப்பு**

வழங்கப்பட்டுள்ளது.

- மத்திய உள்துறை அமைச்சகம் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- எஸ்.எஸ் தேஸ்வாஸ் இந்தோ திபெத்திய காவல் படையின் தலைவராக உள்ளார்
- **செய்தி துளிகள் :**
  - துணை இராணுவப் படைகளுள் ஒன்றான சி.ஆர்.பி.எப் படையில் 3.25 பணியாளர்கள் உள்ளனர்.
  - நக்ஸல் தடுப்பு, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, உள்நாட்டு பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளுக்கு ஈடுபடுத்தப்படுகின்றனர்.

## பாதுகாப்பு செய்திகள்

- **எஸ் எஸ் பி தலைமையகத்தில் மத்திய உள்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.**
  - மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சசஸ்திர சீம பால் நேபாளம், பூடான் நாடுகளுடனான எல்லைப் பகுதிகளை பாதுகாக்கின்றனர்.
  - அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு முதல்முறையாக எஸ்எஸ்பி அலுவலகத்திற்கு ஆய்வு மேற்கொண்டார்.
  - **செய்தி துளிகள் :**
    - எஸ் எஸ் பி தலைமையகம் டெல்லியில் அமைந்துள்ளது.
    - எஸ் எஸ் பி தலைமை இயக்குநர் குமார் ராஜேஷ்

We Shine Academy™

சந்திரா

- எஸ் எஸ் பி இந்தியா – நேபாளம் இடையே 1,751கி.மீ நீள எல்லையையும், இந்தியா – பூடான் இடையே 699 கி.மீ நீள எல்லையிலும் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

## திருக்குறள்

**குறள் எண் : 65**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : மக்கட்பேறு

**மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்**

**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.**

**விளக்கம் :** குழந்தைகள் தம் பெற்றோரின் உடம்பைத் தொடுதல் உடம்பிற்கு இன்பம் தரும். அக்குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டல் காதுக்கு இன்பம் தரும்.